செய்தி வெளியீடு எண்:259 நாள்:27.05.2009

<u>பத்திரிகை செய்தி</u>

## உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளின் உதவி ஆணையர்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வுக் கூட்டம்

சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பொது விநியோகத் திட்டத்தினை 16 உதவி ஆணையர்கள் மற்றும் 2 துணை ஆணையர் செயல்டுத்தி வருகிறார்கள். இவர்களுடைய பணிகளை மேம்படுத்தவும், இதுவரையில் இவர்கள் மேற்கொண்ட பணிகளை ஆய்வு செய்யவும், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று காலை 10.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டத்தினை நடத்தினார்கள்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றுகையில் அத்தியாவசியப் பொருட்கள் லாரிகளில் எடுத்துச் செல்லும்போது வழித்தடம் எழுதப்பட்டுள்ளதா என்பதையும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் எல்லா கடைகளிலும் இருப்பு உள்ளதா என்பதையும், உதவி ஆணையர்கள் கண்காணித்து உறுதி செய்ய வேண்டும். தினந்தோறும் உதவி ஆணையர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும். தலத்தணிக்கை அலுவலர்கள் அன்றன்று தாங்கள் மேற்கொண்ட தணிக்கை விவரங்களை அன்றே உதவி ஆணையரிடம் தெரிவிக்க வேண்டும். ‘அ’ பதிவேடு சரிபார்த்தல் பணியினை விரைந்து முடிக்க வேண்டும். புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்துள்ளவர்களுக்கு 60 நாட்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் குடும்ப அட்டைகள் உள்ள நியாயவிலைக் கடைகளை இனம் கண்டு மக்கள் பயன்பெறும் வகையில் அதனை இரண்டு கடைகளாக பிரிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். நியாயவிலைக் கடைகளிலுள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பப்பட வேண்டும். உதவி ஆணையர் அலுவலகங்களை நவீனப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குடும்ப அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்களை பொது மக்கள் உதவி ஆணையர் அலுவலகங்களில் எளிதாக பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இலவச எரிவாயு வழங்கும் பணி விரைவாக முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றம் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, இணைப்பதிவாளர்கள் (பொது விநியோகத் திட்டம்), துணை ஆணையர்கள் ஆகியோர்கள் பங்குபெற்றனர்.

*******************

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.